[2009 ஜூலை 7

இணைப்பு IX

(820 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 11–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு அறிவிப்புகள், 2009–2010

1. மின்னணு முத்திரையிடும் முறையை அறிமுகம் செய்தல்

இந்திய முத்திரைச் சட்டத்தின்படி, முத்திரைத் தீர்வையை முத்திரைத்தாள்கள் மூலம் செலுத்த வேண்டும். போலி முத்திரைத் தாள்களின் புழக்கத்தினால் அரசின் வருவாய் பாதிக்கப்படுவதால், மாற்று வழிகளில் முத்திரைத் தீர்வையை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என 2006-2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி, புதியதாக மின்னணு முத்திரையிடும் முறையை (e-stampting) விரைவில் அறிமுகம் செய்ய அரசு முடிவு செய்துள்ளது. இம்முறை முதலில் சென்னையில் 9 சார் பதிவாளர் அலுவலகங்களில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. பின்னர் படிப்படியாக மாநிலத்தின் இதர பகுதிகளுக்கும் இம்முறை விரிவுபடுத்தப்படும்.

2. புதிய சார் பதிவாளர் அலுவலகங்கள் திறத்தல்

மாநிலத்தில் பொது மக்கள் தங்களது ஆவணப் பதிவு தொடர்பான தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள மொத்தம் 568 சார் பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன. கடந்த ஆட்சிக்காலத்தின்போது 40 சார் பதிவாளர் அலுவலகங்கள் மூடப்பட்டன. இவற்றில், இவ்வரசு 2006 ஆம் ஆண்டு பொறுப்பேற்றதிலிருந்து தற்போது வரை, 15 சார் பதிவாளர் அலுவலகங்களைத் திறக்க ஆணையிடப்பட்டுள்ளது. நடப்பாண்டில் தேவைக்கேற்ப, ஏற்கெனவே மூடப்பட்ட சார் பதிவாளர் அலுவலகங்களிலிருந்தோ அல்லது ஏற்கெனவே செயல்படும் சார் பதிவாளர் அலுவலகத்தை இரண்டாகப் பிரித்தோ, புதியதாக 5 சார் பதிவாளர் அலுவலகங்கள் திறக்கப்படும்.

3. சார் பதிவாளர் அலுவலகங்களுக்குக் கட்டடங்கள்

மாநிலத்தில் மொத்தமுள்ள 568 சார் பதிவாளர் அலுவலகங்களில் சுமார் 50 சதவிகித அலுவலகங்கள் தனியார் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. தனியார் கட்டடங்களில் இயங்கி வரும்

2009 ஜூலை 7]

அலுவலகங்களுக்கு அரசு கட்டடம் கட்டப்பட வேண்டும் என்ற இவ்வரசின் கோட்பாட்டிற்கேற்ப, இவ்வரசு 2006 ஆம் ஆண்டு பொறுப்பேற்றத்திலிருந்து இதுவரை 35 அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது. நடப்பாண்டில், ரூ.140 இலட்சம் செலவில் 5 சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடம் கட்டப்படும்.

4. பதிவு விவரங்களை கணினியில் உட்புகுத்துதல்

பதிவுத் துறையின் முக்கியமான பணிகளில் வில்லங்கச் சான்று வழங்குவதும் ஒன்றாகும். தற்போது கணினிமயமாக்கப்பட்டுள்ள அலுவலகங்களில் 1983/1986 ஆம் ஆண்டு முதல் கணினிமூலமாக வில்லங்கச் சான்று வழங்கப்படுகிறது. கணினிமூலம் வழங்கப்படும் வில்லங்கச் சான்று வழங்கும் சேவையை மேம்படுத்தும் பொருட்டு, 1975 ஆம் ஆண்டிலிருந்து 1985 வரையிலான பதிவு விவரங்களை கணினியில் உட்புகுத்த ரூ.4.05 கோடி ஒதுக்கப்படும். இப்பணி நிறைவு பெற்றவுடன் 1975 ஆம் ஆண்டு முதல் வில்லங்கச் சான்றுகள் கணினிமூலமாக வழங்கப்படும்.

5. அடமான ஆவணங்கள், மேல்பற்று ஆவணங்கள் மற்றும் காப்புறுதி ஆவணங்களுக்கான முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்தை மாற்றியமைத்தல்.

அனுபவ உரிமையற்ற அடமான ஆவணங்களுக்கான முத்திரைத் தீர்வை 4 சதவிகிதத்திலிருந்து 1 சதவிகிதமாகவும் அதிகபட்சமாக ரூ.20,000 என்றும், பதிவுக் கட்டணத்திற்கு அதிகபட்சமாக ரூ.5,000 என்றும் 12-2-2004 முதல் நிர்ணயம் செய்யப்பட்டது. ஆனால் இதனுடன் தொடர்புடைய மேல் பற்று ஏற்படுத்தும் ஆவணங்கள் (Instruments creating further charge on mortgaged Properties) மற்றும் காப்புறுதி ஆவணங்களுக்கான (Security Bond) முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் மாற்றியமைக்கப்படவில்லை. இம்முரண்பாட்டைக் களைய மேல் பற்று ஏற்படுத்தும் ஆவணங்களுக்கான முத்திரைத் தீர்வை 4 சதவிகித்திலிருந்து 1 சதவிகிதமாகவும் அதிகபட்சமாக ரூ.20,000 என்றும், பதிவுக் கட்டணம் ரூ.5,000 என்றும், காப்புறுதி ஆவணங்களுக்கான பதிவுக் கட்டணம் ரூ.5,000 என்றும் 12-2-2004 முதல் முன்தேதியிட்டு நிர்ணயிக்கப்படும். மேலும், மேற்கண்டவாறு அதிகபட்சத் தொகை நிர்ணயம் செய்து 5 ஆண்டுகளுக்கு மேல் கடந்து விட்ட நிலையில், அனுபவ உரிமையற்ற அடமான ஆவணம், மேல் பற்று ஏற்படுத்தும் ஆவணம்

[2009 ஜூலை 7

மற்றும் காப்புறுதி ஆவணம் ஆகியவற்றிற்கு நடப்பாண்டில் அதிகபட்ச முத்திரைத் தீர்வை ரூ.40,000 என்றும், அதிகபட்ச பதிவுக் கட்டணம் ரூ.10,000 என்றும் நிர்ணயம் செய்யப்படும்.

6. ஆவண எழுத்தர்கள் நியமனம்

ஆவண எழுத்தர்கள் நியமனம் சமீப காலமாக செய்யப்படவில்லை. எனவே, தேவைக்கேற்ப ஆவண எழுத்தர்களுக்கான தேர்வு நடத்தி ஆவண எழுத்தர்களை நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

7. சார் பதிவாளர் அலுவலகங்கள் கணினிமயமாக்கல்

தகவல் தொழில்நுட்ப உத்திகளை பதிவுத் துறையில் அறிமுகப்படுத்தி மக்களுக்கு விரைவான சேவையை அளிக்க ஏதுவாக 450 சார் பதிவாளர் அலுவலங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 118 சார் பதிவாளர் அலுவலகங்களை கணினிமயமாக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இந்த 118 சார் பதிவாளர் அலுவலகங்களிலும் கணினிமயமாக்கப்பட்ட சேவை விரைவில் துவங்கும். இதனால் மாநிலத்திலுள்ள அனைத்து சார் பதிவாளர் அலுவலகங்களிலும் கணினிவழி ஆவணப் பதிவு நடைபெறுவதுடன் இந்தியாவிலேயே இத்தகைய சேவையை வழங்கும் முதல் மாநிலமாகவும் தமிழகம் திகழும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS